**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔍Peer-Reviewed | 🌐 Open Access | 🔗 Crossref DOI & Global Indexing | 📊 Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.81
https://ngmtamil.in/

# கல்வியில் ஐம்புலன்களின் ஆட்சி

**முனைவர் நா.சாரதாமணி**

உதவி பேராசிரியர், தமிழ் துறை, சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி,

சரவணம்பட்டி, கோயம்புத்தூர் .

ஒரு மனிதனை ஆளும் ஆற்றல் அவருடைய மனதிற்கு உள்ளது. மனிதன் அதிகப்படியான அறிவை கொண்டிருந்தாலும் அவரை நல்லவராகவோ தீயவராகவோ வெளி உலகத்திற்கு காட்டுவது மனமே ஆகும். எனவே மனிதரின் ஐம்புலன்கள் வழியாக வெளியே செல்லும் மனதை கட்டுக்குள் வைத்தால் அதன் அபாரமான சக்தியை உணர்ந்து கொள்ளலாம்.

இறைவன் படைத்த மிக ஆற்றலும் அறிவும் வாய்ந்த உயிரினம் மனிதன் மட்டுமே. ஆனால் மனிதர்களுக்கு தம்முடைய மன சக்தியை பற்றியும் ஐம்புலன்களின் ஆற்றலைப் பற்றியும் தெரிவதே இல்லை, அவர்கள் அவற்றைப் பற்றி சிந்திப்பதும் இல்லை.

"ஒருமையில் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்படைத்து"1 (திருக்குறள்-126) என்றார் வள்ளுவர்.

ஒரு மனிதன் தன் ஐம்புலன்களை ஆமை போல் அடக்கினால் அந்த ஒழுக்கமானது அவன் வாழும் வரை ஏழு பிறவிகளுக்கும் காப்பாக அமையும் என்று கூறுகிறது.

மனிதரின் ஐம்புலன்கள் மிகவும் ஆற்றல் கொண்டவை அவற்றை அளவுடன் பயன்படுத்தினால் அவர் யார் என்பதை உலகிற்கு காட்டும். அளவில்லாமல் பயன்படுத்தினால் உலகத்தை அவர்க்கு காட்டிவிடும் அதாவது தமக்கே அவை அழிவை கொடுத்து விடும்.

**பொருள்களை காணும் கண்களின் ஆட்சி**

நாம் விட்டில் பூச்சிகளை பார்த்திருக்கின்றோம். அவை உருவத்தில் மிகச் சிறிதாக இருக்கும் மாலை நேரங்களில் விளக்கு ஏற்றினால் அதனை தேடி வந்து சுடரை சுற்றிக் கொண்டே இருக்கும் அது சுற்றிச் சுற்றி அதன் உள்ளே விழுந்து எரிந்து சாம்பலாகிவிடும். விட்டில் பூச்சியின் கண்களுக்கு ஒளியை மிக அருகில் சென்று பார்க்க வேண்டும் என்ற விருப்பம் அதிகம் எனவேதான் அவை வெளிச்சத்தை காண்பதற்காக அருகில், அருகில் மிக அருகில் சுடரின் அருகில் சென்று வெளிச்சத்தை காண வேண்டும் என்ற அளவில்லாத விருப்பத்தால் அதில் விழுந்து இறந்துவிடும்.

விட்டில் பூச்சியின் கண்களுக்கு சக்தி அதிகம் பலம் மிகுதி ஆனால் அந்த பலமானது அளவில்லாமல் அவற்றின் போக்கில் விட்டதால் அதற்கு அதுவே பலவீனமாகி அழிவை தந்து விட்டது.

கேட்கும் செவிச் செல்வத்தின் ஆட்சி

அசுணமா என்ற பரவை உள்ளது அது குதிரைக்கு இறக்கை இருப்பதைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும். அந்தப் பறவையைப் பற்றி சீவக சிந்தாமணியும் கூறுகின்றது. அசுணமா பறவையின் காதுகளுக்கு பலம் அதிகம் அது மிக அருகில் சென்று இசையை கேட்க வேண்டும் என்று மிகவும் விருப்பம் கொள்ளும். அவை காடுகளிலும் மலைகளிலும் பறந்து கொண்டிருக்கும்.

வேடர்கள் அவற்றை வேட்டையாடுவதற்காக, ஒரு குழுவாக செல்வார்கள் அப்போது வேடன் ஒருவன் புல்லாங்குழலை எடுத்து இசைக்கத் தொடங்குவான். ஓசையை கேட்ட பறவைகள் இசை ஒலி எங்கிருந்து வருகிறது என்பதை தேடத் தொடங்கும் பின்னர் அந்த இனிமையான இசையை அருகில், மிக அருகில் சென்று கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அந்த வேடனின் தலைக்கு சிறிது மேலாக சுற்றி கொண்டே பறக்கும். அவ்வேளையில் மற்ற வேடர்கள் காய்ந்த சருகுகளை ஓரிடத்தில் குவித்து வைப்பர், அதன் அருகே வேடன் புல்லாங்குழல் இசைத்துக்கொண்டே வருவான் அவ்விடம் வந்ததும் பறை என்ற கருவியை எடுத்து தாறுமாறாக ஓசையை எழுப்புவான் அதனைக் கேட்டவுடன் குழப்பம் அடைந்த அசுணமா பறவை, காய்ந்த சருகுகள் எரிகின்ற நெருப்பில் விழுந்து வேடர்களுக்கு உணவாகிவிடும்.

பறவையின் காதுகளுக்கு இசையை கேட்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும் ஆனால் அளவிற்கு மேல் சென்றால் அழிவு தான் என்பதை அது உணராமல் இசையை மிக அருகில், மிக அருகில் சென்று கேட்க வேண்டும் என்பதே அதனுடைய அழிவிற்கு காரணமாக அமைந்துவிட்டது. அசுணமா பறவைக்கு அதன் செவிகளால் அழிவு நேர்ந்து விட்டது.

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்த்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்”2 (திருக்குறள்-6)

கண், செவி, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐம்பொறிகளின் வழியாக ஏற்படக்கூடிய ஆசைகளை அடக்கி ஒழுக்கம் கொண்ட இறைவனின் வழியை பின்பற்றுபவர்கள் நீண்ட நாள் வாழ்க்கையில் இன்பமாக வாழ்வார்கள் என்பது குறளின் கருத்து.

**சுவாசிக்கும் நாசியின் ஆட்சி**

நாம் மாம்பழங்களை உண்ணும் போது சில மிகச் சுவையாக இருக்கும் அவற்றை அறுத்து உள்ளே பார்த்தால் வண்டுகள் இருக்கும் இறந்து போய் கிடக்கும் ஆம் வண்டின் மூக்கிற்கு வாசனை நுகர்வதில் அலாதியான சக்தி உண்டு.

காடுகளில் உறுதியான மரங்களை துளையிட்டு கீழே விழச் செய்யும் இவ்வகையான வண்டுகள் வசந்த காலத்தில் எல்லா தாவரங்களும் பூத்துக் குலுங்கும் அப்போது அந்தப் பகுதியே வாசனையாக இந்திரலோகம் போல் பல வண்ணங்களில் காடே புன்னகை செய்வது போல் காட்சி தரும். அவ்வேளைகளில் வாசனையால் கவரப்பட்ட வண்டுகள் தனக்கு விருப்பமான மலரில் சென்று அமர்ந்து கொள்ளும் சில மா மலர்களில் அமர்வதுண்டு. பூவின் மணத்தை நுகர்ந்து கொண்டே அதில் பல நாட்களாக மயங்கிக் கிடக்கும். அந்த மலரில் மகரந்த சேர்க்கை நடந்து பிஞ்சாகி, காயாகி, பழமாகும் வரை அவ்வண்டு வெளியேராது.

மரத்தையே துளை போடும் அளவு ஆற்றலை கொண்டிருக்கும் அது வாசனையில் மயங்கி மலரிலேயே கிடக்கும் பின்னர் அது பழத்துக்குள்ளே இறந்து கிடக்கும். அதன் மூக்கிற்கு உள்ள அளவுகடந்த சக்தி அளவில்லாமல் சென்றதால் அதற்கு அழிவு நேர்ந்து விட்டது.

**உண்ணும் வாயின் ஆட்சி**

ஆற்றில், குளத்தில் மீன்களை பிடிப்பவர்கள் தூண்டிலிட்டு பிடிப்பார்கள், அதன் நுனிப்பகுதியில் மீனுக்கு தேவையான உணவை மாட்டிவிட்டு அதனை நீரில் விடுவர் அதன் மற்றொரு முனை மீனவரின் கைகளில் இருக்கும். நீரில் இருக்கின்ற மீன் அந்த உணவை பார்த்தவுடனே வேகமாக வந்து உண்ண வேண்டும் என்று ஆர்வத்தால் தூண்டிலை கவனிக்காமல் உணவை பிடிக்கும். மாட்டிக் கொண்டு மற்றவர்களுக்கு உணவாகிவிடும். அதன் வாயால் அதற்கு அழிவு ஏற்பட்டுவிட்டது. நாவின் சுவை ஆர்வம் அளவிற்கு அதிகமானதால் அழிந்துவிட்டது .

மீனின் கண்களுக்கு உணவு மட்டுமே தென்பட்டது, அதனை அழிக்கின்ற அந்த தூண்டில் தென்படவே இல்லை. உண்ண வேண்டும் என்ற வேட்கை அதனை மறைத்து விட்டது அதனாலயே அதற்கு அழிவு ஏற்பட்டுவிட்டது.

**உணர்வைத் தூண்டும் மெய்யின் ஆட்சி**

யானைக்கு மெய் ஆர்வம் அதிகம். அதுவே அதன் பலவீனம் ஆகும். ஒரு ஆண் யானையைப் பிடிக்க மலையின் அடிவாரத்தில் உள்ள காட்டில் ஒரு பெண் யானையை நிறுத்தி வைப்பார்கள். அதனைச் சுற்றிலும் ஒரு பள்ளத்தை அகழ்ந்து எடுத்து அதன் மேல் மரக் கிளைகளை பரப்பி விடுவர் அதனால் பள்ளம் இருப்பது தென்படாது.

மாலை நேரம் தொடங்க அந்தப் பெண் யானை சத்தமிட ஆரம்பிக்கும். அதன் ஒலியைக் கேட்கும் ஆண் யானை மலையிலிருந்து கீழே இறங்க ஆரம்பிக்கும் அப்போது நன்றாக இருள் சூழ்ந்திருக்கும் அதன் கண்களுக்கு பெண் யானையை அடைய வேண்டும் என்ற வேட்கையில் தோண்டியுள்ள பள்ளத்தை கவனிக்காது . கவனிக்காமல் நடந்து வந்து கொண்டே இருக்கும் பள்ளத்திலே விழுந்து மனிதர்களிடம் சிக்கிக் கொள்ளும்.

மலை, காடு, ஆறு என்று பல இடங்களில் சுற்றித் திரிந்த அந்த யானை அளவில்லாத மெய் உணர்வின் மூலமாக பலவீனப்பட்டு அகப்பட்டுக் கொள்ளும். எனவே மெய் உணர்வு அளவில்லாமல் சென்றதால் அதற்கு தாழ்மை நேர்ந்து விட்டது.

வீட்டில் பூச்சிகளுக்கு-கண்கள்

வண்டு – மூக்கு

அசுணமா பறவை - செவி

மீன் - வாய்

யானை – மெய்

இந்த ஒவ்வொரு உயிரினத்திற்கும் அவற்றின் ஒரு புலனால் மட்டுமே அழிவு.

ஆனால் மனிதர்களுக்கு இந்த ஐம்புலன்களாலும் அழிவு ஏற்படும்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

எனவே மிக சக்தி வாய்ந்த ஐம்புலன்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்து ஆளுமை செலுத்தினால் இந்த உலகம் தமக்குள் அடங்கும் இந்த ஐம்புலன்களில் ஏதேனும் ஒன்றின் வசம் மனிதர்கள் அகப்பட்டுக் கொண்டாலும் புகழ், பெருமை, கல்வி, மதிப்பு, நட்பு, உறவு என்று எல்லாவற்றையும் இழக்க நேரிடும். எல்லாவற்றையும் அது சிதைத்து விடும் எனவே ஐம்புலன்களை ஒருமுகப்படுத்தினால் கல்வியில் சிறந்து விளங்கலாம்.

**கல்வி**

இன்றைய இளைய தலைமுறை, நாளைய சமுதாயத்தை வடிவமைக்கும் ஆக்கப்பூர்வமான ஆற்றல் ஆகும் மனித உயிர்கள் உருவெடுத்து பூமியில் நலமுடன் வாழ்வதற்காகவே விரும்புகின்றனர் ஆனால் அவர்களின் மனதில் நிலவுகின்ற எண்ணங்களால் தேவைக்கு அதிகமாக ஆசைகளால் ஆட்பட்டு மற்றவர்களை துன்புறுத்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கும் என்ற நியதி இருந்தால் அவ்வகையான துன்புறுத்தல்கள் கொடுக்கப்பட மாட்டாது. இது மனிதர்களின் மன இயல்பு. இவ்வகையான மனிதரின் உள்ளத்தை பண்படுத்த வேண்டும் அதற்கு முக்கியமானதாக கருதப்படுவது கல்வியே ஆகும்.

ஒரு மாணவன் கல்வியை. கசடற கற்க வேண்டும் அவ்வாறு கற்ற கல்வியால் அவரின் அறிவு, நடத்தை, பழக்கவழக்கங்கள், பண்புகள் என்று பலவும் பக்குவமடையும். அவ்வாறு கற்றுக் கொள்ளும் பாடங்களால் ஐந்து திசைகளிலும் ஓடக்கூடிய குதிரைகளைப் போல செயல்படும். ஐம்புலன்களை ஒருநிலைப்படுத்தும் தன்மை சிறிது சிறிதாக கை வரப் பெறுகின்றான். சுமார் 15 ஆண்டுகளாக ஆசிரியரின் கண்காணிப்பு, கண்டிப்பு போன்றவற்றால் செதுக்கப்பட்டு படிப்பை முடித்து வெளிவரும் மாணவன் மனிதனாக சமுதாயத்திற்கு கொடுக்கப்படுகின்றான்.

பண்புடன் வரும் மனிதன் தன் மனித சமுதாயத்தை உயர்த்த பாடுபடுவதில் மாமனிதனாக மாறுகின்றான்.

எனவே இந்த சமுதாயத்திற்கு சிறந்த மாணவர்களும், மாமனிதர்களுமே தேவையாக உள்ளனர். அவர்களை உருவாக்குவது கல்வியாகும் அவ்வகையான கல்வியை எவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டும்.

“உடையார் முன் இல்லார் போல் ஏகற்றும் கற்றார் கடையறை கல்லாதவர்”3 (திருக்குறள்- 395)

ஆசிரியரின் முன்பாக ஒரு மாணவன் அமர்ந்து கல்வி கற்கும் தன்மையை வள்ளுவர் கூறுகின்றார். மிகுந்த செல்வந்தரின் முன்பாக ஏழ்மையில் இருக்கும் ஒருவர் பொருளை வாசித்து பணிவுடன் நிற்பதை போல ஆசிரியரின் முன்பாக மாணவர் பணிவுடன் இருந்து கல்வியை கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு கல்வியை கற்றுக்கொள்ள நூல்களைப் படிக்கும் போது ஆராய்ந்து சரியான நூல்களைப் படிக்க வேண்டும்.

“கல்வி கரையில கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கின் பிணி பல…..”4( நாலடியார்-135)

கல்விக்கு கரை என்பது கிடையாது அந்த கல்வியை கற்பவர்களும் குறைந்த ஆண்டுகளே கற்கின்றனர் அந்த குறைந்த ஆண்டுகளிலும் பிணிகள் பல நேர்ந்து விடுகின்றன. அவ்வாறு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கல்வியை கற்கின்ற சில நாட்களில் ஆராய்ந்து நல்ல நூல்களையே கற்க வேண்டும். பாலையும் நீரையும் கலந்து வைத்தால் அதனை அதில் பாலை மட்டும் அருந்துகின்ற அன்னப்பறவை போல ஆராய்ந்து தகுதி வாய்ந்த நூல்களை மட்டுமே கற்க வேண்டும் என்று நாலடியார் கூறுகின்றது.

கல்வியை கற்காததால் ஏற்படும் தாழ்மை

மனிதர்கள் கல்வியை கற்காததால் அவர்கள் செய்கின்ற செயல்களானது சரியா, தவறா, அழிவானதா என்பதையே தெரிந்து கொள்ளாமல் செயல்களை செய்து விடுகின்றனர். அவற்றால் அவர்களுக்கு தீமையே விளைகின்றன. அதனால் அவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பெரும் துன்பமானது உண்டாகி விடுகிறது.

"கல்லார்க்கு இன்னா ஒழுகலும், காழ்க்கொண்ட
இல்லாளை கோலால் படைத்தலும் இல்லம்
சிறியாரைக் கொண்டு புகழும்……"5 (திரிகடுகம்-03)

. கல்லாதவர்களை துன்புறுத்துவது இல்லத்தில் உள்ள மனைவியை கோலால் அடிப்பது தகுதி இல்லாத கீழ் மக்களை வீட்டிற்கு அழைத்து வருவது இம்மூன்றும் ஒருவனின் அறியாமையால் அவனுக்கு தானே தேடிக் கொள்ளும் அறிவாகும் என்று திரிகடுகம் கூறுகின்றது.

கல்வியை கற்றவர்கள் மற்றவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்ற பண்பை கொண்டிருப்பார்கள் எனவே அவர்கள் பேசுவது துன்புறுத்துவது என்பது அவர்களின் வாழ்க்கையில் செய்யாத பண்புகளாக இருக்கும்

"இல்லாரைக் காப்பர் இறப்பவர் இவ்வாறு கல்லார் விடுவார்"6(திரிகடுகம்- 68)

வறியவர்களை காப்பவர், யாசகம் கேட்பவர், கொடை வழங்குபவர் மூவரை கல்வியை கற்றவர்கள் புகழ்ந்து பேசுவார்கள் .மற்றவர்கள் மனம் நோகுமாறு பேசுபவர்கள் கல்லாதவர்களே ஆவார் என்று திரிகடுகம் கூறுகின்றது.

கற்றவர்களின் தூய்மையான பண்பு

கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு தேவையான செல்வத்தை மட்டும் தருவது அல்ல. நற்பண்பு, சிறந்த நடத்தை, நேர்மை, உண்மை, பிரன்பொருள் நயவாமை, நடுநிலைமை போன்ற அனைத்து நல்லியல்புகளையும் தருவதாக இருக்க வேண்டும். செல்வத்தை மட்டுமே கொடுக்கும் கல்வி தூய்மையான கல்வியாகது.

ஒரு மனிதனை விலங்காக இல்லாமல் மனிதனாக வாழ வழி வகுப்பது கல்வியாகும். அந்த கல்வியை நல் ஆசிரியர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும். விவேகானந்தர் கல்வியை பற்றி கூறும் போது கல்வியை கற்ற ஒருவர் சமுதாய வாழ்க்கைக்கு வரும் பொழுது அவர் எந்த கண்காணிப்பும் இல்லாமல் தம் பணியை சரிவர செய்ய வேண்டும் அவ்வாறு ஒவ்வொரு மனிதரும் செயல்பட்டால் இந் நாட்டில் காவல் நிலையங்களும் நீதிமன்றங்களும் தேவையில்லாமல் இருந்திருக்கும். மனிதர்களை காவல்துறையினர் கண்காணித்துக் கொண்டே இருந்தால், மற்றவர்கள் தம்மை கண்காணிக்கிறார்கள் என்ற மனநிலையில் தவறுகளை செய்ய மாட்டார்கள். இந்த மனநிலை காவல் இல்லாத போது தவறுகளை செய்ய வைக்கும் எனவே கல்வி என்பது எந்த நிலையிலும் தன்னை

குற்ற இளைக்காமல் வைத்திருக்கும் நிலையை தர வேண்டும் அதுவே கல்வியாகும் என்று குறிப்பிடுகின்றார்.

**கல்வியின் இயல்பு**

இவ்வுலகில் மனிதர்கள் அழகு என்று எவ்வளவோ கூறி இருக்கின்றனர் ஆனால் உண்மையாகவே அழகு என்பது கல்வியே என்று நலடியார் கூறுகின்றது.

" குஞ்சு அழகும் கொடுத்தானை கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல- நெஞ்சத்து

நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு' 7 ( நாலடியார்-131) என்று கூறுகின்றது அழகாக அலங்காரம் செய்கின்ற கூந்தலின் அழகு பூசி கொள்கின்ற மஞ்சளின் அழகு, உடுத்துகின்ற ஆடையில் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட அந்த முந்தானையின் அழகு இவையெல்லாம் அழகு அல்ல ஒருவரின் மனதை ஒரு பக்கம் சாராமல் நடுநிலைமையோடு வைத்திருக்கின்ற கல்வியே அழகு என்று நாலடியார் கூறுகின்றது.

கல்வி என்பது மனிதனுக்கு தேவையான அனைத்தையும் கொடுக்கும். புகழ், பொருள், ஆனந்தம் நட்பு என்று அனைத்தையும் செம்மையுற தருவது கல்வியே ஆகும்.

இந்த உலக வாழ்க்கைக்கு தேவையான பயன்களை தருவது கல்வியாகும். மற்றவர்களுக்கு கொடுப்பதால் குறையாது எங்கும் புகழ் பெற செய்வது, தான் இருக்கின்றவரை தீமை இல்லாமல் தம்மை காப்பது, இந்த உலகத்தில் அறியாமை என்ற மயக்கத்தை போக்குகின்ற மருந்து கல்வியே ஆகும்.

**கல்வியின் மேன்மை**

உவர் நிலத்தில் விளைகின்ற உப்பை கூட சான்றோர்கள் நல்ல நிலத்திலே விளைந்த நெல்லைப் போன்று மேன்மையாக உயர்ந்த பொருளாக மதிப்பர் அதுபோல தாழ்ந்த நிலையில் இருக்கின்ற மக்கள் கல்வியை கற்றவராக இருந்தால் அவர்களை எல்லோரும் மேலான இடத்தில் வைத்து மதிப்பார்கள் என்று நல்லடியார் கூறுகின்றது.

" களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்" 8 (நாலடியார் -133)என்று நாலடியார் கூறுகின்றது.

நிலையாமை

இந்த உலக வாழ்க்கை நிலையானது அல்ல. நிலை என்று பல மனிதர்கள் நினைத்து மற்றவர்களுக்கு துன்பத்தையும் அழிவையும் கொடுக்கின்றனர் ஆனால் இந்த உலக வாழ்க்கை என்பது நாம் பயணம் செய்வதை போல நாம் இறங்கும் இடம் வந்தால் இந்த உலக வாழ்க்கையில் இருந்து நீங்கி கொள்ள வேண்டும் அதுதான் உலக இயல்பு. உயிர்கள் எல்லாம் பிறக்கும் பொழுது உடலை விட்டு சென்று விடு என்றாலும் அவ்வுயிர் செல்வதில்லை. அந்த உடலை வயோதிகம் நெருங்கிய பின் அவ் உடலிலேயே தங்கி விடு என்றாலும் அது நிற்பதில்லை எனவே இவ்வுலக வாழ்க்கையில் கல்வியை கற்று வாழும் வரை நன்றாக வாழ வேண்டும் என்று நான்மணிக்கடிகை கூறுகின்றது "பிறக்கும் கால் பேரெனவும் நில்லெனவும் நில்லா உயிரனைத்தும்…"9

(நான்மணிக்கடிகை-43)

இவ்வுலக வாழ்க்கைக்கு, மனிதர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை இடைப்பட்ட காலத்தில் மற்றவர்களை துன்புறுத்தாமல் தம்மிடம் உள்ள பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து நன்றாக கல்வி கற்று நல்ல பண்புடனே வாழ்ந்து செல்ல வேண்டும் என்பதையே நம் முன்னோர்கள் கூறி சென்றுள்ளனர்.

இவ்வுண்மையை அறிந்த சான்றோர்கள் நம்முடைய பண்டைய தமிழ் மக்கள். அவர்களின் பழைய இலக்கியங்களில் நமக்கு வாழ்க்கையை வாழும் நெறிமுறைகளை கூறிவிட்டு சென்றுள்ளனர். இது பெருமைக்குரிய ஒன்றாகும்

தொகுப்புரை

இவ்வுலகில் சிறந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்றால், கல்வியை நன்றாக கற்க வேண்டும். அவ்வாறு கல்வியை கற்க ஐம்புலன்களை ஒருமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும். கண், காது, மூக்கு, வாய், மெய் இவை மூலமாக மனமானது வெளியே செல்கின்றது. அம்மனதை கட்டுப்படுத்தி கற்கும் கல்வியானது ஏழு பிறவிகளுக்கும் காப்பாக அமையும்.

சிறந்த கல்வியை கற்கின்ற தலைமுறையானது நல்ல சமுதாயத்தை உருவாக்கி நல் உலகை நெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை .

இவ்வாறு கீழ்க்கணக்கு நூல்களில் நம் முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

**சான்ரெண் விளக்கம்**

[1]. திருக்குறள் பாடல் எண- 126

[2]. திருக்குறள் பாடல் எண்-06

[3]. திருக்குறள் பாடல் எண் - 395

[4]. நாலடியார் பாடல் எண்- 135

[5]. திரிகடுகம் பாடல் எண்- 03

[6]. திரிகடுகம் பாடல் எண்- 68

[7]. நாலடியார் பாடல் எண்- 131

[8]. நாலடியார் பாடல் எண் - 133

[9]. நான்மணிக்கடிகை பாடல் எண்-43